# கிறிஸ்து மீண்டும் வருவது மிகவும் சிறந்தது

## 5.4 மெய்யானச் சமாதானம்




**வேத வசனம்:** **இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள் வருமென்று நீங்களே நன்றாய் அறிந்திருக்கிறீர்கள். சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும் போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும். அவர்கள் தப்பிப்போவதில்லை.**

*1 தெசலோ. 5:2-3*

**அறிக்கை:** **என்னுடைய சமாதானத்தை உங்களுக்குத் தருகிறேன் என்று கர்த்தராகிய இயேசு சொன்னார்**



**சத்தியம்:** இந்த உலகத்தின் காரியங்களால் உண்மையானச் சமாதானத்தைக் கொடுக்க இயலாது. கர்த்தராகிய இயேசுவே உண்மையான சமாதானத்தைத் தேவையான அளவு கொடுக்க இயலும்.

### வேத பகுதி: மத்தேயு 8:23-27

**பாடம்**

**1. கர்த்தர் மேல் தொடர்ந்து நம்பிக்கையை வைப்பவர்:** கர்த்தருடைய சீடர்கள் கலிலேயாக் கடலைக் கடக்கையில் பயத்தால் பீடிக்கப்பட்டு அழுதார்கள். “ஆண்டவரே இரட்சியும்”. மிகுந்த புயலினிமித்தம் படகு அமிழத்தக்கதாக ஆட்டம் கண்டது. அவர்களுக்கு விசுவாசம் இல்லாததால் பயந்து நடுங்கினார்கள். நாமோ, சர்வ வல்லமையுள்ளவரும், சர்வ ஞானமுள்ளவருமாகிய நம் தேவனை உறுதியாக நம்ப வேண்டும். “உம்மை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால், நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்.” (மத். 8:23-27., ஏசாயா 26:3-4)

**2. ஜெபத்தில் எல்லாவற்றையும் கர்த்தரிடத்தில் ஒப்புவிப்பவர்:** “நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும்.” இது தேவனுடைய வாக்குறுதி. நாம் நமக்குரியவைகள் அனைத்தையும் தேவனிடம் ஒப்புவித்து அவரிடம் ஜெபிக்கும்போது அவருடைய ஆவிக்குரிய சமாதானத்தை மகிழ்வுடன் அனுபவிப்போம். (பிலிப்பியர் 4:6-7)

**3. தேவனுடைய இராஜ்யத்தின் சித்தத்தைச் செய்பவர்:** இறுதி நாட்களில் பல துன்பங்களை சந்திக்கப்போகிறோம் என்றும் பூமி அதிர்ச்சிகள் போன்ற பல பேரழிவுகளைச் சந்திப்போம் என்றும் வேதம் குறிப்பிடுகிறது. ஒரு சிறந்த அறிஞனாலும் சரிசெய்ய இயலாத, பணக்காரனாலும் தன்னைப் பாதுகாத்துக்கொள்ள இயலாத பிரச்சனைகள் இந்த பூமியில் தோன்றும். கர்த்தர் மட்டுமே பூமியை ஆளுவார். தேவனுடைய சித்தம் செய்கிறவர்களே சமாதானமாக வாழுவார்கள். “என் உட்காருதலையும் என் எழுந்திருக்குதலையும் நீர் அறிந்திருக்கிறீர் என் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகிறீர்... முற்புறத்திலும் பிற்புறத்திலும் நீர் என்னை நெருக்கி, உமது கரத்தை என்மேல் வைக்கிறீர்.” எருசலேமின் பாதுகாப்புக்காக ஜெபிப்பதும் தேவனுடைய சித்தம் (மத்தேயு 6:33, சங்கீதம் 139:2,5, 122:6)

**4. கர்த்தரே சமாதானக் காரணர்:** ஆண்டவர் இயேசு தம்மைப் பின்பற்றுகிற அனைவருக்கும் ஒரு வெகுமதியை வைத்திருக்கிறார். “என் சமாதானத்தையே வைத்துப்போகிறேன்” என்று அவர் சொல்லியிருக்கிறார். கர்த்தர் எல்லா தீமைகளையும் ஜெயித்திருக்கிறார். மரணத்தை வென்றிருக்கிறார். கர்த்தர் பிதாவிடம் வேண்டுதல் செய்யும்போது, நம்மை உலகத்திலிருந்து எடுத்துவிடாமல் தீமையினின்று காக்கும்படியே வேண்டுதல் செய்தார். “தீமையை விட்டு விலகி, நன்மை செய், என்றென்றைக்கும் நிலைத்திருப்பாய்.” என்று சங்கீதம் 37:27 தெளிவாகப் போதிக்கிறது. சமாதானப்பிரபுவாகிய இயேசு பிதாவின் வலது பாரீசத்தில் அமர்ந்துகொண்டு நமக்காக வேண்டுதல் செய்கிறார். (யோவான் 17:15)

**முடிவுரை:** ஆண்டவர் இயேசு கொடுக்கும் சமாதானம் உலகத்திற்குரியது அல்ல. உலகத்தாலும் அதை பறித்துக்கொள்ள இயலாது. நன்றியுள்ள இதயத்துடன் தேவனிடம் கேட்கும்போது அதை அவர் நமக்கு தருகிறார். புனித பூமியாகிய எருசலேமுக்காக நாம் ஜெபிப்பதும் தேவனுடைய சித்தமாக இருக்கிறது.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.